**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்**

**அசல் வழக்கு எண்.91/2022**

2025ம் ஆண்டு **நவம்பர் மாதம் 18–ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.1–ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகாலட்சுமி | வா.சா | 1 |
| த/க/பெயர் | கோபால் | தொழில் | தறி |
| கிராமம் | குமாரபாளையம் | வட்டம் | குமாரபாளையம் |
| வயது | 44 | நாள் | 18–11–2025 |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் வாதி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1) 29.08.1979 தேதியிட்ட வாதியின் தகப்பனார் மற்றும் தாயார் பெயரில் உள்ள கிரய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.1 ஆகவும்,**

2) 23.09.1981 தேதியிட்ட வாதியின் தாயார் வாதிகளின் தகப்பனார் பெயருக்கு எழுதிக்கொடுத்த தாவா விடுதலை பாத்திய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.2 ஆகவும்,**

3) வாதியின் தாயார் பெயரில் உள்ள குடும்ப அட்டை நகல் **வா.த.சா.ஆ.3 ஆகவும்,**

4) பாலா கேஸ் ஏஜென்ஸி மூலமாக வாதியின் தாயார் பெயருக்கு வழங்கப்பட்ட பதிவு சீட்டு **வா.த.சா.ஆ.4 ஆகவும்,**

5) 19.07.2013 தேதியிட்ட பிரதிவாதிகள் மற்றும் சின்னதம்பி என்ற பாலசுப்பிரமணி ஆகியோர் ஏற்படுத்திக்கொண்ட கிரய ரத்து பத்திரம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.5 ஆகவும்,**

6) 21.01.2021 தேதியிட்ட வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி என்பவரது இறப்பு சான்று

கணினி நகல் **வா.த.சா.ஆ.6 ஆகவும்,**

7) வாதிகளின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) **வா.த.சா.ஆ.7 ஆகவும்,**

8) 04.02.2022 தேதியிட்ட வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் கூடியது அலுவலக நகல் **வா.த.சா.ஆ.8 ஆகவும்,**

9) 05.02.2022 தேதியிட்ட பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை 4 எண்ணிக்கை **வா.த.சா.ஆ.9 ஆகவும்,**

10) தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டி மதிப்பு கணினி நகல் **வா.த.சா.ஆ.10 ஆகவும்**,

11) 31.01.2022 தேதியிட்ட தாவா சொத்து தொடர்பான வில்லங்க சான்று கணினி நகல் **வா.த.சா.ஆ.11 ஆகவும்**,

12) 20.01.2022 தேதியிட்ட வாதிகளின தாயார் விஜயலட்சுமி என்பவரது இறப்பு சான்று கணினி நகல் **வா.த.சா.ஆ.12 ஆகவும்**,

13) 04.06.2018 தேதியிட்ட 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.13 ஆகவும்,**

14) 04.06.2018 தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் **வா.த.சா.ஆ.14 ஆகவும்,** ஆகியவற்றை குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-M.Ramachandran

Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.

Sd/.M.Ramachandran, Principal Subordinate Judge, Tiruchengode.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, CrPC)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUCHENGODE

| | | |
|---|---|---|
| Sessions Case No. | | 121/2025 |
| Depositions of Witness for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.2 |
| Name | : | கார்த்திக் |
| Father's/Husband Name | : | வேலு |
| Village | : | சாமியார்கிணறு |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Calling | : | காரவேலை |
| Age | : | 29 |
| Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 14-11-2025 | | |

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் சாமியார்கிணற்றில் வசித்து வந்து காரவேலை செய்துவருகிறேன். அ.சா.1—யை தெரியும். அவர் எனது அண்ணன். எதிரிகளை தெரியாது. சுமார் 9 வருடங்களுக்கு முன்பாக மதியம் 1 மணி வாக்கில் அ.சா.1—க்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை நான் ஓட்டிக்கொண்டு அந்த வாகனத்தில் அ.சா.1 தனசேகரன் உட்கார்ந்து இருவரும்

குஞ்சுமாரியம்மன் கோவில் அருகேயுள்ள ரெட்டை புளியமரம் அருகே சென்றுகொண்டிருந்தபோது அப்போது எதிர் திசையில் வந்த கார் நாங்கள் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அதில் எனது இடதுபக்க கையில் காயம் ஏற்பட்டது. அ.சா.1–க்கு இடது பக்க மண்டையில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட இருவரையும் அருகிலிருந்தவர்கள் திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். சிகிச்சையிலிருந்தபோது திருச்செங்கோடு நகர காவல் நிலைய ஆய்வாளர் விசாரித்தபோது நடந்த சம்பவம் பற்றி கூறினேன்.

**அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

2

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சாட்சி தனசேகரன் என்பவர் மீது திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தில் 2 கொலை வழக்குகள் நிலுவையிலிருப்பதாகவும், கொலை வழக்கு சம்மந்தமாக தனசேகரனுக்கும், சுரட்டையன் வகையறாவிற்கும் முன்விரோதம் இருந்து வந்து தனசேகரன் ஒசூரிலிருந்து திருச்செங்கோடு கோர்ட்டிற்கு வாய்தாவிற்கு சென்றுவிட்டு கடந்த 05.08.2017–ம் தேதி மாலை 5.45 மணி சுமாருக்கு நானும், சாட்சி தனசேகரன் என்பவரும், தனசேகரின் அப்பாவிற்கு சொந்தமான இருசக்கர வாகனமான டிஎன் 34 யு 7446 என்ற அப்பாச்சி வாகனத்தில் திருச்செங்கோடு பஸ்டாண்டில் வந்து டீ குடித்துவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக நான் இருசக்கரவாகனத்தை ஓட்ட சாட்சி தனசேகரன் பின்னால் அமர்ந்துகொண்டு திருச்செங்கோடு டூ நாமக்கல் ரோட்டில் தங்கவேல் முதலியார் வீட்டு முன்பாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பைக்கில் சென்றுகொண்டிருந்தபோது எங்களுக்கு எதிர் திசையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இரண்டு பைக்குகளில் வந்தவர்கள் எங்களை தடுத்து நிறுத்தி எதிரி சுரட்டையன் என்பவர் சாட்சி தனசேகரன் என்பவரை பார்த்து எங்களுடைய ஆட்களை நீ தான்டா கொலை பண்ணினாய் என்று சொல்லிக்கொண்டு அவர் மறைத்துவைத்திருந்த அரிவாளை எடுத்து கெட்ட வார்த்தையால் திட்டி ஏன்டா அடங்கமாட்டியா, எங்களை யாரென்று தெரியாதா என்று சொல்லிக்கொண்டு இத்தோடு

செத்துபோடா என்று சொல்லி சாட்சி தனசேகரனை அரிவாளில் வெட்டிய போது அவர் விலகிக்கொள்ளவே இடது பக்க காதிற்கு மேல் தலையில் வெட்டு காயம் ஏற்பட்டதாகவும், தடுக்க வந்த என்னை எதிரி ரஞ்சித் என்பவர் பிடித்துக்கொள்ள எதிரி சுரட்டையன் என்னை அரிவாளால் வெட்டியபோது அதை தடுக்கவே இடது உள்ளங்கையில் வெட்டியதில் ரத்த காயம் ஏற்பட்டதாகவும், அப்போது எதிரிகள் சரத், கோகுலமுருகன், கிருபாகரன், பிரபு சிவா, பாண்டு என்கிற வசந்தராஜ், சின்ன சுரட்டையன் என்ற பாலசக்திதாசன் ஆகியோர்களும் ஆளுக்கொரு அரிவாளுடன் ஓடிவந்தபோது நாங்கள் சத்தம் போடவே ரோட்டில் சென்றவர்கள் அருகே வந்ததும் எதிரிகள் கொண்டுவந்த அரிவாளை எடுத்துக்கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், பின்பு ஒரு போக்குவண்டியின் மூலமாக காயம்பட்ட இருவரும் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும், நடந்த சம்பவம் பற்றி



போலீஸார் விசாரித்தபோது சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. Sd/.M.Ramachandran, Principal Subordinate Judge, Tiruchengode. |
| |

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, CrPC)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUCHENGODE

| | | |
|---|---|---|
| Sessions Case No. | | 121/2025 |
| Depositions of Witness for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.3 |
| Name | : | சண்முகம் |
| Father's/Husband Name | : | நல்லப்பன் |
| Village | : | திருச்செங்கோடு |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Calling | : | லேத் பட்டறை |
| Age | : | 42 |
| Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 14-11-2025 | | |

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

அ.சா.1 தனசேகரனை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்க எதுவும் தெரியாது. சுமார் 8 வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் நான் என் வீட்டிலிருந்தபோது திருச்செங்கோடு நகர காவல் நிலைய போலீஸார் என்

வீட்டிற்கு வந்து என்னிடம் தனசேகரனுக்கு பக்கத்து வீடா என்று கேட்டார்கள். ஆமாம் என்று கூறினேன். வேறு எதுவும் விசாரிக்கவில்லை. அ.சா.1, அ.சா.2 ஆகியோருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

**அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 05.08.2017–ம் தேதி மாலை 5.45 மணிக்கு என்னுடைய வீட்டிலிருந்து புதிய பஸ் நிலையம் செல்லவேண்டி என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது எதிரே எஸ்என்டி ரோட்டில் சாட்சி தனசேகரனும், கார்த்தியும் இருசக்கர வாகனத்தில் வந்தபோது அவர்களுக்கு எதிர் திசையில்



கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இரண்டு பைக்குகளில் வந்தவர்கள் தனசேகரனும் மற்றொருவரும் வந்த பைக்கை தடுத்து நிறுத்தி பைக்கில் வந்த ஒருவன் தனசேகரனை பார்த்து எங்களுடைய ஆட்களை நீதான்டா கொலை பண்ணினாய் என்று சொல்லிக்கொண்டு அவன் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து கெட்ட வார்த்தையால் திட்டி அடங்கமாட்டியா என்று சொல்லி நாங்கள் யாரென்று தெரியாதா என்று சொல்லிக்கொண்டு தனசேகரனை வெட்டியபோது அவர் விலகிக்கொள்ளவே அவரின் இடது பக்க காதிற்கு மேல் தலையில் வெட்டியபோது ரத்தகாயம் ஏற்பட்டதாகவும், அதை பார்த்த தனசேகருடன் வந்த நபர் தடுத்தபோது எதிர் திசையில் பைக்கில் வந்த மற்றொரு நபர் அவர் கையை பிடித்துகொள்ளவே தனசேகரனை வெட்டிய அதே நபர் அவரையும் ஓங்கி அரிவாளால் வெட்டியபோது அந்த நபர் தடுக்கவே இடது உள்ளங்கையில் வெட்டுபட்டு ரத்தகாயம் ஏற்பட்டதாகவும், பின்பு விசாரித்தபோது வெட்டிய நபர்கள் சுரட்டையன் என்ற பிரபாகரன், ரஞ்சித் என்பதும் தெரியவந்தது. உடன் வந்த நபர்கள், பெயர் விலாசம் எதுவும் தெரியாது எனவும், காயம் பட்ட நபர்கள் சத்தம்போடவே நானும் ரோட்டில் சென்ற வழிபோக்கர்களும் தடுக்கபோனபோது எங்களை பார்த்தும் மேற்படி நபர்கள் கிட்டே வந்தால் குத்திவிடுவோம் என்று மிரட்டிவிட்டு பைக்கில் ஓடிவிட்டதாகவும் பின்பு தனசேகரன் வீட்டிற்கு தகவல் சொல்லி சிகிச்சைக்காக போக்குவண்டியின் மூலம் தனசேகரனின்

அக்கா சுகுணா என்பவர் அழைத்து சென்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. Sd/.M.Ramachandran, Principal Subordinate Judge, Tiruchengode. |
| |

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, CrPC)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUCHENGODE

| | | |
|---|---|---|
| Sessions Case No. | | 121/2025 |
| Depositions of Witness for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.4 |
| Name | : | ருக்மணி |
| Father's/Husband Name | : | வேலு |
| Village | : | திருச்செங்கோடு |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Calling | : | காரவேலை |
| Age | : | 48 |
| Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 14-11-2025 | | |

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் சாமியார்கிணற்றில் வசித்து காரவேலை செய்துவருகிறேன். சாட்சி கார்த்தி எனது மகன். சாட்சி தனசேகரனை தெரியாது. சுமார் 6, 7 வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் வண்டியிலிருந்து கீழே விழுந்ததில் காயம்பட்டதாகவும், மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்ட்டதாக தகவல் கிடைத்து மருத்துவமனைக்கு சென்று

பார்த்தேன். எனது மகனை விசாரித்தபோது இருசக்கரவாகனத்திலிருந்து கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டதாக கூறினார்

**அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 05.08.2017–ம் தேதி மாலை 5.45 மணிக்கு எஸ்என்டி ரோடு தங்கவேல் முதலியார் வீட்டின் முன்பாக தனசேகரன் என்பரையும், எனது மகனையும் யாரோ வெட்டிவிட்டதாகவும், அவர்களை திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு போனதாக கேள்விபட்டு திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு சென்று எனது

2

மகனை பார்த்து அவருக்கு காயத்தை பற்றி விசாரித்தபோது அடையாளம் தெரியாத நபர் யாரோ வெட்டிவிட்டதாக கூறியதாகவும், போலீஸார் விசாரணை செய்தபோது மேற்படி விவரத்தை சொல்லிவிட்டு, தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. Sd/.M.Ramachandran, Principal Subordinate Judge, Tiruchengode. |
| |